[2] ஆய்வுக் கட்டுரைப் பொருள் : சைவ சித்தாந்த அறிவுக் கொள்கை - காட்சி

ஆய்வாளர் ; சோ. கிருஷ்ணராசா
மெய்யியல் துறை,
யாழ்ப்பாண வளாகம்.

சைவ சித்தாந்தத்தின் காட்சிக் கொள்கையை ஆராய்வதாயமையும் இவ்வாய்வுரை சிவஞான சித்தியாரில் காணப்படும் 'அளவைப்' பகுதியினை ஆதாரமாகக் கொண்டதாகும்.

தற்கால அறிவாராய்ச்சிக் கொள்கைகள் போலல்லாது சைவசித்தாந்த அறிவுக் கொள்கைபற்றிய ஆய்வில் உளவியற்கருத்துக்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இத்தகையதோர் போக்கு இந்திய மெய்யியல் மரபிற்கேயுரிய ஒரு பொதுப்பண்பாகும். இந்திய உளவியற் கருத்துக்கள் பரிசோதனையை அடிப்படையாகக் கொள்ளாது பெருமளவு அனுமானங்களாகவே இருப்பதனை அவதானிக்கலாம். அவ்வனுமானங்களே அறிவுக் கொள்கைகளுக்கான முற்கற்பிதங்களாகவும் உள.

காட்சியின் மூலமாக தரப்படும் அறிவு எனும்பொழுது அனுபவம் அதனுள் அடங்கியது என்பது பெறப்படும். அனுபவத்தை வகையீடு செய்பவர்கள் (1) புலன் அனுபவம் என்றும் (2) புலன் கடந்த அனுபவம் என்றும் பாகுபடுத்துவர் காலம், வெளி என்ற பதார்த்தங்களுள் அடங்கும் காட்சி புலன் அனுபவம் சார்ந்தது, அவ்வாறு இல்லாதிருப்பவை புலன் கடந்த காட்சிசார்ந்தது என்றும் கூறிக்கொள்ளலாம். ஆனால் முன்னைய காட்சியின் வாய்ப்பினைப் பரிசோதிப்பதற்குப் பௌதிக உலக அடிப்படை இருப்பதுபோல, பின்னயதைப் பரிசோதிக்க எவ்வித அடிப்படைகளும் இல்லை என்ற வலிமையான குற்றச்சாட்டுக் கூறப்படுகின்றது.

அனுபவத்திலிருந்து பெறப்படும் அறிவானது பொதுவாகத் நேர்நிலை அறிவு என்றும், வழிநிலை அறிவு என்றும் பாகுபடுத்தப்படும். நேர்நிலைப் பிரத்தியட்சம் எனப்படும் அதனைப் புலக்காட்சிக்கும் புலனுணர்ச்சிக்கும் சமமாக நியாய வைசேடிகர் ஏற்பர். ஆனால் சைவசித்தாந்திகள் புலக்காட்சியிலிருந்து யோகக்காட்சி ஈறாக காட்சியில் நால்வகைகளை எடுத்துக் காட்டுவர். வேறு அறிவை வேண்டாது நிற்கும் அறிவுஎன பிரத்தியட்சத்திற்கு இலக்கணம் கூறப்படும். பிரத்தியட்சத்தின் முதன்மையான இயல்பு இதனால் எடுத்துக்காட்டப்பட்டது என கிரியண்ணா கருதுவர். "மலை தீயுடைத்து" என்ற அனுமான வழியிலான முடிவு பிரத்தியட்சத்தையே அடிப்படையாகக் கொண்டது. ஆன்மாவின் அறிவு பெறும் வாயில்களில் ஒன்றான அனுமானம் தனக்கென்ற தனியான இயல்புகளைக் கொண்டுள்ளதாயினும், அதன் ஆரம்பம் புலனுக்கு உடனடியாகத் தரப்பட்டது என்பதிலிருந்தே தொடங்குகின்றது. நியாயக்கொள்கையான மேற்கூறிய கருத்து சைவசித்தாந்தத்திற்கும் உடன்பாடே.

காட்சியறிவு இந்திரியங்களிற்கும், பொருள்களிற்கும் இடையில் எழும் உறவால் தோன்றுவது. நியாயதரிசனம் அவ் உறவுமுறையை ஆறுவகையினதாக எடுத்துக் காட்டுகிறது. சித்தியார் அளவைப்பாடல்களில் இதுபற்றிய குறிப்புக்கள் எதுவும் காணப்படாதபொழுதும், உரையாசிரியர்களது விளக்கங்களில் (மறைஞான தேசிகர்; சிவாக்கிரகயோகி, திருவிளங்கம்) காணப்படுகின்றது. எனினும் திருவிளங்கம் ஆறுவகைத் தொடர்புகளும் சைவசித்தாந்தத்திற்கு உடன்பாடானவையல்ல என்ற குறிப்பொன்றினைத் தெரிவிக்கின்றார்.

காட்சியின் உள இயலான பண்புபற்றி வாத்சாயனரின் நியாய சூத்திர பாஷ்யம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. அகம் மனதுடன் தொடர்புற மனம் புலன்களுடன் தொடர்புற, புலன்கள் பொருளுடன் தொடர்புறுகின்றன. போதிய ஒளி போன்ற புறப்பொருட்கள் நன்கு அமையின், காட்சி பிறக்கிறது. காட்சிபற்றிய நியாயக்கொள்கையினரின் மேற்கூறிய விளக்கம் சைவசித்தாந்தத்திற்கும் உடன்பாடானதே. புற உலகுபற்றிய அறிவைமட்டும் பிரத்தியட்சம் குறிப்பிடாது. அகநிலை அனுபவங்களையும் அது உள்ளடக்குகிறது. குறிப்பாக தன்வேதனைக்காட்சியினது ஆரம்பம் புற உலகின் தொடர்பினை வேண்டி நிற்பினும், அகநிலை அனுபவங்களுடன் தொடர்புடையது என்பதை அவதானிக்கலாம். இன்பம், துன்பம் என்பவற்றை நுகர்வதற்குக் கருவியாக அமைவது மனம். தன்வேதனைக்காட்சி தன்னியல்பில் அப்பண்புகளைக் கொண்டுள்ளதாதலால் பிரத்தியட்சத்தின் முடிவெல்லையாக அமைகின்றது.

காட்சி பல பகுதிகளைக் கொண்டது. எனவே இது வரையறைக்குட்பட்டது; இது சவிகற்பம் எனப்படும். எவ்வகையிலும் பண்புகளைப் பெறாத தனிப்பட்ட பொருளைத் தருவதானதன்மையுடையது நிர்விகற்பக்காட்சி. அதாவது கருத்தேற்றம் பெறாக்காட்சி என வரையறுக்கப்படும். இந்நிலையில் பொருளின் உண்மை மாத்திரம் உணரப்படுகின்றது. உற்று நோக்குவதற்குப் பொருளாகவும் அகக்காட்சிக்குத் தரப்பெறும் முற்கூற்றுக்களாகவும் நிர்விகற்பக் காட்சி அமைகின்றது. இவ்விதமான பண்புக் கூறுகளையும் பெறாத நிர்விகற்பக்காட்சி அகத்தினை அடைவதினால் சவிகற்பக் காட்சியாகின்றது. சிவஞானசித்தியார் நிர்விகற்பக் காட்சியையும் சவிகற்பக் காட்சியினையும் இருவேறு பிரிவுகளாக எடுத்துக் காட்டுகின்றது. பொருளது வரையறுக்கப்படாப் பண்புகளை அறியும் நிர்விகற்பக் காட்சியே சித்தியார் கூறும் நால்வகைக் காட்சிகளில் முதல் நிலையான இந்திரியக் காட்சியாகும். நிர்விகற்பக் காட்சியில் உளத்தின் தொடர்பு ஏற்படுவதன் மூலம் சவிகற்பக்காட்சி பெறப்படுகின்றது. சவிகற்பக் காட்சி இருநிலைகளைக்கொண்டது. அவை முறையே மானதக்காட்சி, தன்வேதனைக்காட்சி என்பனவாகும்.

வாயிற்காட்சி. மானதக்காட்சி என்ற இரண்டும் இரு வேறுபட்ட காட்சியின் வகைகளாகக் கொள்ளப்படுகின்றன. ஆனால் அவை உண்மையில் இரு காட்சி வகைகள் அல்ல. காட்சியின் இரு நிலைகளே. அடிப்படையில் புறவயமான பொருள் அல்லது நிகழ்ச்சி என்பதை இலக்காகக்கொண்டது என்ற பொதுப்பண்பை உள்ளடக்கியது. இவ்வடிப்படையே வாயிற்காட்சியையும், மானதக்காட்சியையும் காட்சியின் இரு நிலைகளாகக் கொள்ளுதல் வேண்டும் என்ற எனது கருத்திற்கு ஆதாரமாகும். கூடிய அளவிற்குத் தன்வேதனைக்காட்சியும், யோகக்காட்சியும் அகவய இயல்பைக் கொண்டிருப்பதால், முன்னைய இரு காட்சி நிலைகளிலிருந்து வேறுபட்டதாகக் கருதப்படுகின்றன. சிவாக்கிரயோகியார் கருத்துப்படி ஆன்மா பெறும் இன்பதுன்ப அனுபவங்கள் தன்வேதனைக்காட்சியால் அறியப்படுகின்றது. திருவிளங்கம் மேற்படி கருத்தினை விரித்துப் பின்வருமாறு கூறுகின்றார். ''புத்தி தத்துவத்திற் சவிகற்பமாய்ப் பொருந்திய மானதக் காட்சியுணர்வு முக்குணங்களுக்குள்ளே சாத்துவிக குணத்தொடு கூடுதலால் இன்பமாகவும் தமோ குணத்தொடு கூடுதலால் துன்பமாகவும் தோன்றும். அவ்வின்ப துன்ப உணர்வைப் புருடன் அனுபவிக்கும்படி கலை, காலம், நியதி, வித்தை, அராகம் எனும் ஐந்து தத்துவங்களுடனும் பொருந்தும். பொருந்திய அவ்வின்ப துன்பங்களைப் புருடனது அறிவு அறிவது தன்வேதனைக்காட்சியாகும்.'' எனவே திருவிளங்கத்தினது உரையை, குறிப்பிட்ட சித்தியார் பாடலுக்கான பொருத்

தமான விளக்கமாக ஏற்றுக்கொண்டால் பிரத்தியட்ச நிலைகளில் இறுதிநிலையாக உளதே தன்வேதனைக்காட்சி என்ற முடிவு பெறப்படும். எனவே இதுவரை கூறிய வற்றிலிருந்து சைவ சித்தாந்தப் பிரத்தியட்ச கொள்கை மூன்று நிலைகளை உள்ளடக்கியது என்றும், முறையே முதலாவது நிலையாக இந்திரியக்காட்சி உளது என்றும் இரண்டாவது நிலையாக உளது மானதக்காட்சி என்றும், யோகக்காட்சி மூன்றுவது நிலையாகும் என்றும் ஒரு முடிவிற்கு வரலாம்.

யோகக்காட்சி மேற்கூறிய மூவகைக் காட்சி நிலைகளினின்றும் வேறுபட்ட ஒன்றாக உளது: காலம், வெளி என்ற பதார்த்தங்களுள் அடங்குவதாக முற்கூறிய காட்சி நிலைகள் இருக்க யோகக்காட்சி அவற்றிற்கப்பாற்பட்டதாக இருக்கின்றது.

இதுவரை வாய்ப்பான அறிவியற் காட்சிபற்றிக் கவனம் செலுத்திய நாம் இனி வாய்ப்பற்றஅறிவு பற்றி ஆராய்வோம்.

தவறான காட்சி அல்லது வாய்ப்பற்றஅறிவு இரு விதங்களில் ஏற்படலாம்; என சித்தியார் கூறுகின்றது. அவை முறையே ஐயம், திரிபு என்பனவாகும். உரையாசிரியர்கள் ஐயத்தினை விளக்குவதற்குக் 'குற்றியோமகனோ' என்ற உதாரணத்தினைத் தருகின்றனர். மனிதனோ, மரமோ என அறியாது ஏதோ ஒன்று உள்ளது என அறியும்நிலை ஐயம் ஆகும். இரு பொருள்களிற்கிடையிலான பொதுப்பண்புகளே ஐயக்காட்சிக்குக் காரணமாகின்றன. கடந்தகால அனுபவங்கள் அல்லது ஞாபகம் அதனுடன் இணைந்துள்ளது. எனினும் ஐயநிலையில் இருபொருட்களிற்கிடையிலான (1) தடுமாற்ற நிலையும் (2) தனிப்பண்புகள் இடம் பெறு நிலையும் (3) பொருளிலிருந்து தரப்பட்டது, சிறிதளவும் எம்மால் ஊகிக்கப்பட்டது, சிறிதளவும், ஆன மூன்று சிக்கலான செயல்முறைகளும் கலப்பும் காட்சியில் இடம் பெறுகின்றன.

விகற்பக்காட்சியின் இன்னொருவகை திரிபுக்காட்சி எனச் சித்தியார் குறிப்பிடுகின்றது. இதனை விளக்க உரையாசிரியர்கள் 'கயிற்றைப் பாம்பாகக் காணுதல்' என்ற உதாரணத்தைத் தருகின்றனர். இந்திய தரிசனங்கள் திரிபுக் காட்சியைக் கூடுதலாக உளவியலடிப்படையிலேயே ஆராய்ந்தனர். அறிவியல் விழுமியங்களின் கட்டுப்பாடு உள்பொருளியல் அடிப்படை என்பவற்றுடன் இணைத்தே திரிபுக்காட்சியின் விளக்கம் அவர்களால் தரப்படுகின்றது. சித்தியாரும் அதன் உரையாசிரியர்களும் புலன்கள் அனைத்திலும் திரிபுக்காட்சி எவ்வாறு எழலாம் என்ற ஆய்வு செய்யவில்லை. உட்பொருளை இன்னொன்றாகக் காண்பது திரிபு என்று கட்புலனில் எழும் திரிபுக்காட்சி நிலைபற்றிமட்டுமே ஆராயப்படுகின்றது.

தவறான காட்சி ஏற்படும் இன்னொரு சந்தர்ப்பம் 'பிரத்தியட்சப்போலி' என அழைக்கப்படும். சித்தியார் (அளவைப்) பாடல்களிலோ, அதற்குரிய உரையாசிரியர் குறிப்புக்களிலோ அதுபற்றி எதுவும் கூறப்படவில்லை. 'சைவப்பிரகாசனம்' என்ற நூலில் சங்கர பண்டிதர் சில குறிப்புக்களைமட்டும் தந்துள்ளார். அவரது கருத்துப்படி பிரத்தியட்சப்போலி என்பது பித்தம், படலம், தூரம், இருள் முதலிய குற்றங்களோடு கூடிய இந்திரியத்தினால் ஏற்படுவது.